**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 17/2023 |
| Name | : Chandrasekar |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் துங்காவி உள்வட்ட நில வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 23.12.2022 ம் தேதி காலை 11.00 மணிக்கு மைவாடி 2 புல எண். 395/7 நிலத்தில் வண்டிப்பாதையை ஆக்கிரமித்ததாக தங்கவேல் என்பவர் ஆஜர் எதிரி செல்லம்மாள் மீது கொடுத்த புகாரின் பேரில் ஆக்கிரமிப்பை அகற்ற நான், மைவாடி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மடத்துக்குளம் வட்டாட்சியர் ஆகியோர் அரசு ஜீப் மூலம் அங்கு சென்றோம். ஏற்கனவே ஆஜர் எதிரிக்கு 2 முறை அறிவிப்பு கொடுத்து அவர் வாங்க மறுத்துவிட்டார். ஒரு வாரம் கால அவகாசம் கொடுத்து வட்டாட்சியர் தலைமையில் ஆக்கிரமிப்பை அகற்ற சென்றோம் அப்போது நில அளவையர் உடன் வந்தார். வண்டிப்பாதையின் நீளம் 109 மீ அகலம் 6 மீ அதை ஆஜர் 1 மீ அகலத்திற்கு ஆக்கிரமிப்பு செய்து தென்னை மரம் வைத்திருந்தார். தென்னை மரத்தை ஜே.சி.பி இயந்திரம் மூலம் எடுக்கச் சென்றோம். வாகன எண் ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரி ஜே.சி.பி முன்பு மறித்து படுத்துவிட்டார். ஆக்கிரமிப்பை எடுக்க முடியவில்லை இது சம்மந்தமாக நான் மடத்துக்குளம் காவல் நிலையத்தில் எழுத்து மூலமான புகார் கொடுத்தேன். என்னிடம்

காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.09.25 14:09:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

CC No. : 17/2023

Name : Selvi

P.W. : 2

Father Name :

Village :

Taluk : Madathukulam

Occupation :

Age : /2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது காங்கேயம் டாஸ்மாக் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த **23.12.2022**ம் தேதி நான் மடத்துக்குளம் வட்டாட்சியராக பணியில் இருந்த போது தங்கவேல் என்பவர் கொடுத்த மனுவின் பேரில் ஆக்கிரமிப்பை எடுப்பதற்காக மைவாடி 2 கிராமத்திற்கு நில வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், நில அளவையர் ஆகியோருடன் சென்றோம். புல எண். 395/7 நிலத்தில் எதிரி தென்னை மரத்தை வைத்து 109 மீ நீளத்திற்கும் ஆக்கிரமிப்பு செய்திருந்தார் அதை ஜே.சி.பி வைத்து அகற்றும் போது ஆஜர் எதிரி செல்லம்மாள் ஜே.சி.பி முன்பு படுத்து தடுத்துவிட்டார். ஜே.சி.பி வாகனத்தின் எண் ஞாபகம் இல்லை. இது சம்மந்தமாக நில வருவாய் ஆய்வாளர் புகார்

கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.09.25 14:09:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 17/2023 |
| Name | : Tamilselvan |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது காரத்தொழுவு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.12.2022 ம் தேதி நான் மைவாடி 2 கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது சுமார் 11.00 மணியளவில் ஆக்கிரமிப்பு தங்கவேல் மற்றும் அவரது மனைவி கொடுத்த புகாரின் பேரில் புல எண். 395/7 நிலத்திற்கு வண்டிப்பாதை புறம்போக்கு ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக வட்டாட்சியர் தலைமையில் நான், நில வருவாய் ஆய்வாளர் மற்றும் நில அளவையர் சென்றோம். அளந்து பார்த்தபோது சுமார் 1 மீ அகலத்திற்கு 109 மீ நீளத்திற்கு தென்னை மரம் வைத்து ஆக்கிரமிப்பு இருப்பதாக தெரிந்தது. தென்னை மரத்தை அகற்றுவதற்காக ஜே.சி.பி இயந்திரம் மூலம் முயற்சி செய்த போது ஆஜர் எதிரி செல்லம்மாள் ஜே.சி.பி முன்பு படுத்து தடுத்துவிட்டார். இது சம்மந்தமாக

நில வருவாய் ஆய்வாளர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.09.25 14:09:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்